[1992 பிப்ரவரி 10

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசிற்கு நிதிநிலை கடுமையாக இருக்கிற காரணத்தினால், தொண்டு நிறுவனங்கள் மூலம் இப்படிப்பட்ட ஆதிதிராவிடர்களுக்கென்று பாலிடெக்னிக்குகள் தொடங்க முன்வந்தால், மத்திய அரசால் இயங்கப்படுகிற 'நேஷனல் ஷெட்யூல்டு காஸ்ட் ஃபைனான்சியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்' மூலமாக நமது 'தாட்கோ' நிறுவனம் நிதியுதவி வழங்க முன்வந்தால், பரிந்துரை செய்யுமா ? அப்படிச் செயல்பட முன்வந்துள்ள தொண்டு நிறுவனங்களுக்கு நமது அரசு ஆக்கமும், ஊக்கமும் அளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்கள் முன்வந்தால், அதைக் கல்வித் துறை பரிசீலிக்கும் என்று அறிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 116— திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்.

116—

சின்னசேலம் ஆட்டுப்பண்ணை பணியாளர்களை நிரந்தரமாக்குதல்

*வினா எண் 1003— திரு. ஆர். பி. பரமசிவம் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சின்னசேலம் ஆட்டுப்பண்ணையில் தினக்கூலி அடிப்படையில் வேலை செய்யும் பணியாளர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடுங்காலமாக சின்னசேலம் ஆட்டுப் பண்ணையில் பலர் தினக்கூலியாக பணியாற்றுகிறார்

1992 பிப்ரவரி 10]

கள். அவர்களில் ஒரு சிலரையாவது பணியின் தன்மை, தரம், உண்மையான உழைப்பு போன்றவைகளைக் கருத்தில் கொண்டு நிரந்தரமாக்க அரசு ஆவன செய்யுமா என்பதோடு, எவ்வளவு பேர் தினக்கூலியாக வேலை செய்கிறார்கள், அவர்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் எத்தனைப் பேர், இதர இனத்தவர் எத்தனைப் பேர் என்பதையும் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாத் துறைகளிலும் உள்ள சில்லறைச் செலவினப் பணியாளர்களை மட்டும் நிரந்தரம் செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது, தினக்கூலி பணியாளர்களை மட்டும் நிரந்தரம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை, மொத்தமாக சில்லறைச் செலவினப் பணியாளர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுத்து நடவடிக்கை மேற்கொள்ள கருத்துரு பரிசீலனையில் உள்ளது,

முற்பகல் 10-40

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்தவரை தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் அதிகமாக இதுவரை தினக் கூலிகளாக வேலை செய்து வருகின்றார்கள். அவர்களை நிரந்தரமாக்கும்போது அரசினுடைய சலுகை, ஊதிய உயர்வு போன்றவை கிடைக்கும் என்பதால், அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும். இதனால் சமதர்ம சமுதாயத்தை அடைய முடியும் என்ற நோக்கத்தோடு, குறைந்தது அந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களை யாவது நிரந்தரமாக்கும் ஆய்வை அரசு எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. தற்போது நிதித் துறையின் பரிசீலனையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 117—

திரு. வ. சத்தியமூர்த்தி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.